(உ) இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களால் அவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோரப்பட்டிருக்கும் 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை இந்து முன்னணியின் சார்பில் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

7. அமைச்சரின் அறிக்கை.

கரும்பு விலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் மற்றும் கரும்பு உற்பத்தியாளர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து 8.5 சதம்